திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் தற்போது திருநெல்வேலியில்தான் இருக்கிறது. இராமநாதபுரத்திற்கும், திருநெல்வேலிக்கும் கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தலைநகரத்திற்குக் கொண்டு வரப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது ஏற்கனவே இருந்த இடத்திலே இருந்து இயங்குவதில் ஒரு பிரச்சினையும் இருக்காது. கண்காணிப்புப் பொறியாளர் வருகின்ற காரணத்தினால் பெரிய முன்னேற்றம் அடைந்துவிடும் என்று சொல்ல முடியாது. கண்காணிக்கக் கூடியவர்தான் அவர். எனவே, அந்தந்தப் பகுதிக்குச் சென்றுதான் அவர் கண்காணிக்க வேண்டும். கோட்டப் பொறியாளர் தேவை என்று கேட்கிறபோது நியாயம் இருக்கிறது. ஆனால், கண்காணிப்புப் பொறியாளர்கள் தனியாக அந்த இடத்திற்கு வருவது என்பது கடினமான காரியம்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி தாலுகா இருக்கிறது. அதில் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் இதுவரை இல்லை. ஆகவே, அங்கு ஒரு உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கு அரசிடம் ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு அலுவலகத்துடன் அது இணைந்து இருக்கும். எனவே, அது தனியாக அந்த இடத்திற்குத் தேவைதானா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் பொருள்களின் விலை.

19—(*வினா எண். 10310)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் தனியார் நிறுவனத்தின் உற்பத்தி பொருளைவிட விலை கூடுதலாக உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

1987 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): டான்சி நிறுவனம் பலதரப்பட்ட துறைப் பொருட்களை உற்பத்தி செய்து வழங்குகின்றமையால் ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்ற பதிலை கூறமுடியாது. ஆயினும், தனியார் நிறுவனங்களில் தர மிகு பொருட்களின் விலையைக் காட்டிலும் அதே அளவு தர முள்ள டான்சியின் பொருட்களின் விலைகள் குறைந்தவையே.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற டான்சி போன்ற நிறுவனங்களில் உற்பத்திக்கு ஆகின்ற செலவு தனியாருடைய உற்பத்திச் செலவைவிட மிக அதிகமாக இருக் கின்ற காரணத்தினாலே டான்சியில் பொருட்கள் வாங்குவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்தி னுடைய ஒதுக்கீடுகளுக்கெல்லாம் டான்சியிலே வாங்குவதற்கு உத் தரவு இருக்கின்ற காரணத்தினாலும், டான்சியில் விலை அதிக மாக இருக்கின்ற காரணத்தினாலும் அரசாங்கத்திற்குப் பணம் இழப்பு ஏற்படுகிறது. எனவே, இதைப் பரிசீலித்து தனியாரிடம் போட்டி போடுகின்ற அளவுக்கு டான்சியில் உற்பத்திச் செல வைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல் வதுபோல உற்பத்திச் செலவு கூடுதலாக இருக்கிற காரணத்தி னாலும், ஆயத் தீர்வை, விற்பனை வரி போன்றவைகளின் பளு அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் சில பொருட்களின் விலை கூடுதலாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது 1986–87-ல் நாம் தொடர்ந்து மைய அரசை வற்புறுத்தியதன் காரணமாக ஆயத் தீர்வைச் சலுகைகளை சில பிரிவுகளுக்குக் கொடுத்திருக்கி றார்கள். ஆகவே, விலைகளைக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலகத்திற்கு ஒரு நாற்காலி வாங்கவேண்டுமென் றால்கூட டான்சியில் 2,500 ரூபாய்க்கு பில் போடுகிறார்கள். டான்சியில் ஒரு நாற்காலி விலை 2,500 ரூபாய் என்றால், தனி யாரிடத்தில் 500 ரூபாய்க்கும் குறைவாக இருக்கிறது. இவ்வளவு விலை வித்தியாசம் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப் பரிசீலித்து விலையைக் குறைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல ஆயத் தீர்வையை நாம் ஒழுங்காகச் செலுத்துகிறோம். விற்பனை வரி

5 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை கட்டுகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட வரிப் பளுவும் மற்றபடி நல்ல தரமான மூலப் பொருட்களை வாங்கிச் செய்ய வேண்டுமென்ற காரணத்தினாலும் தரமான பொருட்களை வழங்கவேண்டுமென்ற காரணத்தினாலும், தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு தனியார் நிறுவனங்களைவிடக் கூடுதலான, அரசு நிர்ணயிக்கின்ற சம்பளத்தைத் தரவேண்டிய காரணத்தினாலும் நிதிநிறுவனங்களில் வாங்கிய கடனுக்கு வட்டி ஏராளமாக நாம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் காரணங்களினால் சில இனங்களில் விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆயத் தீர்வை இப்போது குறைந்து இருக்கிறது. அதைப் போல பணியாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து அந்தச் செலவை ஏறக்குறைய ஆண்டுக்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு குறைத்து இருக்கிறோம். இந்தக் காரணங்களினாலும் நிச்சயமாக இப்போது இருக்கிற விலையைக் காட்டிலும் குறைத்து விற்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய முடியும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்திலே விற்கக்கூடிய பொருட்களுக்கு விலை அதிகம் என்று சொன்னார்கள். அதற்கு ஆயத் தீர்வை தான் காரணம் என்றும் சொன்னார்கள். இருந்தாலும் அவர்களால் உற்பத்திச் செய்ய முடியாத அதே பொருட்களை, தனியார் துறையிடம் குறைந்த விலைக்கு வாங்கி டான்சி என்ற சீலைப் போட்டு கூடுதலான விலைக்குக் கொடுக்கிறார்கள். முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களுக்குப் பாத்திரங்கள் வாங்கவேண்டிய நேரத்திலேகூட உடனடியாக வாங்கவேண்டும் என்ற காரணம் சொல்லி, வெளியே பாத்திரங்கள் வாங்கி இருக்கிறார்கள். வெளியிலே இருந்து வாங்கும்போது விலை குறைவு, டான்சியிலே வாங்கக்கூடிய பொருட்களின் விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, தனியாரிடத்திலே வாங்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்றும் அப்படித் தவறுதலாக வாங்கிக் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டிருந்தால் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பாத்திரங்களாக இருந்தாலும் சரி, டான்சி மிக வேகமாக செயல்பட்டு ஓட்டுப் பெட்டிகளைச் செய்து தந்த காலத்திலே இருந்தாலும் சரி, டான்சியினுடைய பொருட்கள் வெளியிலிருந்து வாங்கப்பட்டு முத்திரை போடப்பட்டு விற்கப்படுவதில்லை. முழுக்க முழுக்க டான்சியிலேயே உற்பத்தி செய்து விற்கப்படுகிறது. எங்காவது அப்படி ஒரு தவறு கண்டுபிடித்து மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களேயானால் கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.